[திரு. ப.உ. சண்முகம்] [1986 நவம்பர் 21

மாணவர்களுக்கு ரூ. 60-ம், மாதம், உணவுச் செலவுக்காக மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகைகள் கடைசியாக 1981-ல் நிர்ணயிக்கப்பட்டவை. இதற்கிடையே விலைவாசிகளுடைய உயர்வைக் கருத்தில் கொண்டு, மாணவர் களுக்கு நல்ல சத்துள்ள உணவு வழங்க வேண்டும் என்ற எண்ணத் தில் மாண்புமிகு முதலைமச்சர் அவர்கள் 1—12—1986 முதல் கீழ்க்கண்டவாறு மாதம் உணவுத் தொகைகளை உயர்த்தலாம் என்று ஆணையிட்டுள்ளார்கள்.

(அ) கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சிக்கூட விடுதிகள்: சென்னை நகரில் மட்டும், இப்பொது வழங்கப்படும் தொகை ரூ. 95 (நபர் ஒன்றுக்கு), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கலாம் என்று ஆணையிட்டிருக்கிற தொகை மாதம் ரூபாய் 140. கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சிக் கூட விடுதிகளில் மற்றப் பகுதிகளில் இப்போது வழங்கப்படுகின்ற தொகை ரூபாய் 80. இனிமேல் முதலமைச்சர் ஆணையிட்டு இருக்கும் தொகை ரூபாய் 135.

மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிக்கூட விடுதிகளில் பழங் குடியினர் விடுதிகள், பழங்குடியினர் உறைவிடம், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப் பள்ளி களில்இப்போது வழங்கப்படுகின்ற தொகை மாதம் ரூபாய் 60; முதலமைச்சர் உயர்த்தி இருக்கின்ற தொகை ரூபாய் 85 ஆகும். இதனால் மொத்தம் 97 ஆயிரம் மாணவர்கள் பயன் அடைவர், இதனால் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் ரூபாய் 1.73 கோடியும், பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் ரூபாய் 91 இலட்ச மும் அரசுக்குத் கூடுதல் செலவாகும். இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையாக இட்டிருக்கிறார்கள் என் பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

5. கவன ஈர்ப்புக்ள்.

(அ) ஓமலூர் டாசல் செராமிக் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட வேண்டியது குறித்து.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம், ஓமலூர் டாசல் செராமிக் சென்டரில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு லே-ஆஃப் ஊதியமும் நிறுத்தப்பட்டுவிட்ட நிலையில் அவர்கள் படும் அல்லல் குறித்தும், மீண்டும் அத்தொழிற்சாலை திறக்கப்படவேண்டிய அவசியம் குறித்தும் உள்ள'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

1986 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டம் ஓமலூரில் உள்ள டாசல் (TACEL) தொழிற்சாலையில் 44 பேர் பணிபுரிகின்றனர். அவர்கள் 10 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் வரை வேலை செய்துள்ளனர். நிர்வாகம், மூலப்பொருள் பற்றாக்குறையினால் 21–6–1986 முதல் லே-ஆப் கொடுத்துள்ளது. லே-ஆப் ஈட்டுத்தொகை 30–9–1986 வரை கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பின் நிறுத்தப்பட்டுள்ளது. 28–10–1986 அன்று இந்நிறுவனத்தின் இயங்கும் டாசல் பீங்கான் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர், சென்னையில் நிர்வாகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தையின்போது நிர்வாகமானது, தற்சமயம் நஷ்டத்தில் தொழிற்சாலை ஓடிக்கொண்டிருப்பதால், தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு தற்சமயம் உள்ள மாறுபடும் பஞ்சப்படியை (Variable Dearness Allowance) தொடர்ந்து இருக்க வேண்டும் என தெரிவித்ததாகவும், அதற்கு தொழிலாளர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்றும், ஆனால் நிர்வாகம் தங்கள் நிலையை மீண்டும் மாற்றிக்கொண்டு, 5 வருடங்களுக்கு தற்சமயம் உள்ள மாறுபடும் பஞ்சப்படியை (Variable Dearness Allowance) தொடர்ந்து இருக்க வேண்டுமென்று கூறியதாகவும், ஆனால் தொழிலாளர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிகிறது. இப்பிரச்சினை குறித்து சேலம், தொழிலாளர் துறை துணை ஆணையர் விசாரணை நடத்தி வருகிறார்.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொது இருக்கிற பிரச்சினை, தொழிற்சாலையை விரைவாகத் திறக்கவேண்டும் என்பதுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்துள்ள விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி கூட, பேச்சுவார்த்தைக்குக் பிறகு நிர்வாகம்தான் தன்னுடைய முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, நிர்வாகம் கொஞ்சம் இறங்கி வந்து, அதற்குத் தொழிலாளர்களும் இணங்கி ஒரு உடன்பாடு ஏற்படும் நிலைமையை உருவாக்கி, தொழிற்சாலையை விரைவாகத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளவார்களா என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமுகமாகத் தீர்ப்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தையின்போது ஆட்குறைப்பு செய்யலாமா என்று கூட நிர்வாகம் யோசித்துக் கொண்டிருப்பதாகத் தொழிலாளர்கள் என்னிடம் குறிப்பிட்டார்கள். அப்படி ஆட்குறைப்பு செய்வதைத் தொழிலாளர்கள் விரும்பவில்லை. அதற்கு மாறாக உற்பத்தியை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்திக் கொடுக்கிறோம், அதற்காக உழைக்கிறோம். அதற்காக என்ன நிபந்தனை போட்டாலும் ஒப்புக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். எனவே பேச்சுவார்த்தையின்போது ஒரு சுமுகமான நிலைமை ஏற்படும் வகையில் ஆட்குறைப்பு இல்லாமல் பார்த்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கன்சிலியேஷன் நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

(ஆ) கொடைக்கானல் தொழில் நுட்பக் கல்லூரியில் ஏற்பட்ட தீ விபத்து.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கடந்த 6–11–1986 அன்று கொடைக்கானல் தொழில் நுட்பக் கல்லூரியில் தீ விபத்து ஏற்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு, தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கொடைக்கானலில் இயங்கும் கோடை அண்ணா பாலிடெக்னிக் ஒரு சுயநிதி ஆதாரப் பாலிடெக்னிக் ஆகும். அப்பாலிடெக்னிக்கின் மாணவர்கள் சேதப்படுத்தப்பட்ட பொருள்களுக்காக மாணவர்களிடமிருந்து ஈட்டுத்தொகை வசூலிக்கப்படலாகாது மாணவர்கள் விடுதியில் சாப்பாட்டுக் கட்டண நிலுவைத் தொகையினை செலுத்தாவிடினும் வாரியத்தேர்வுகளுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்படவேண்டும் என்ற சில கோரிக்கைகளை முன்வைத்து 23–10–1986 முதல் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்யத் தொடங்கினர். இதுகுறித்து தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் உத்திரவின் பேரில் மதுரை, தமிழ்நாடு பாலிடெக்னிக்கின் முதல்வர் அந்நிர்வாகத்தினரிடம் கலந்து மாணவர்களுக்கு தேர்வுகளுக்கான நுழைவுச் சீட்டினை எந்தவித முன் நிபந்தனையும் இன்றி வழங்க ஏற்பாடு செய்திருந்தார். அப்பயிலகத்தில் பயிலும் மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு 3–11–1986